பயணக் காப்புறுதி என்றால் என்ன?

INSURANCE
REGULATORY
COMMISSION
OF SRI LANKA

சந்தைப்படுத்தல் அபிவிருத்தி மற்றும் வெளிவாரி தொடர்புப் பிரிவு
இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு

1.

பயணக் காப்புறுதி என்றால்?



பயணம் செய்யும் போது எதிர்கொள்ளும் இடர்களில் இருந்து காப்புறுதியைப் பெற்றுக்கொள்வதற்காக மேற்கொள்ளப்படும் காப்புறுதியாகும். அதன் ஊடாக நீங்கள் பயணம் மேற்கொள்ளும் வழியில் எதிர்கொள்ளும் இடர்களில் இருந்து நிதிப் பாதுகாப்பினைப் பெற்றுக்கொள்வீர்கள்.

உள்ளூர் மற்றும் வெளிநாட்டுப் பயணங்களை காப்பீடு செய்யும் வகையில் காப்புறுதியினைப் பெற்றுக்கொள்ள முடிவதுடன், பயணக் காலத்தினுள் ஏற்படும் விபத்து, எதிர்பாராது எதிர்கொள்ளும் வைத்தியச் செலவு, கடவுசீட்டு, பயணப் பொதி, பண்டங்கள் தொலைதல் என்பவற்றினால் ஏற்படும் நட்டங்களுக்கு ஒத்துக்கொண்ட தொகையின் அளவுக்கு நட்டஈட்டுத் தொகையைப் பெற்றுக்கொள்ள முடியும்.

2.

ஏன் பயணக் காப்புறுதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்?

சில வெளிநாடுகளுக்குப் பயணங்களை மேற்கொள்ளுவதற்கு விசாவினை பெற்றுக்கொள்ளும் போது பயணக் காப்புறுதியைப் பெற்றுக்கொள்ளுதல் கட்டாயமானதாகும். அவ்வாறு கட்டாயமானதாக இல்லாத போதிலும், உங்களின் வியாபார நடவடிக்கைகள், கற்கை நடவடிக்கைகள், விடுமுறையைக் கழிப்பதற்கு வெளிநாட்டுக்குச் செல்கையில் காப்புறுதியைப் பெற்றுக்கொள்ளுதல் மிக முக்கியமானதாகும். ஏனெனில், அநேகமான வெளிநாடுகளில் வைத்திய வசதிகளைப் பெற்றுக்கொள்வதற்கு மற்றும் சுற்றுலாவின் போது ஏற்படும் இடர்களின் போது ஏற்படும் நட்டங்களை ஈடுசெய்வதற்கு அதிக செலவு ஏற்படும் என்பதனாலாகும்.

3.

பயணக் காப்புறுதியில் பிரதானமாக காப்புறுதி செய்யப்படும் நிகழ்வுகள் எவை?

பல்வேறுபட்ட காப்புறுதி நிறுவனங்களின் ஊடாக விநியோகிக்கப்பட்ட பயணக் காப்புறுதியின் ஊடாக காப்புறுதி செய்யப்பட்டு மற்றும் கிடைக்கும் நன்மைகளில் சிறிய வேறுபாடு காணப்பட்ட போதும், பொதுவாக பயணக் காப்புறுதியின் ஊடாக கீழ்வரும் நிகழ்வுகள் காப்புறுதி செய்யப்படும்.

- பயணத்தின் போது இடைநடுவில் ஏற்படும் திடீர் மருத்துவ செலவுகள்.
- பயணத்தின் போது ஏற்படும் திடீர் மரணத்தின் போது தேகத்தை நாட்டிற்கு கொண்டு வருவதற்கான மற்றும் இறுதி கிரியைக்கான செலவுகள்.
- பயணக் கடவுச்சீட்டு காணாமற் போதல், பயணப் பொதி காணாமற் போதல் மற்றும் தனிப்பட்ட உடமைகள் காணமற் போனதால் ஏற்படும் நட்டம்
- பயணம் இரத்துசெய்வதனால் ஏற்படும் மேலதிக செலவு
- பயணத்தின் போது ஏற்படும் எதிர்பாராத நடவடிக்கைகள், அதாவது விமானத்தைக் கடத்திச் செல்லல் போன்றவற்றினால் உங்களுக்கு ஏற்படும் செலவுகள்

கீழே குறிப்பிட்ட செயற்பாடுகளுக்குப் பொதுவாக பயணக் காப்புறுதியின் ஊடாக காப்பீடு வழங்கப்படுவதில்லை.

- காப்புறுதி பெறுவதற்கு முன்னர் இருந்த சுகாதாரப் பிரச்சினை
- ஆபத்துள்ள விளையாட்டு மற்றும் செயற்பாடுகள்
- தற்கொலை செய்து கொள்ளல் அல்லது போதைப் பொருளைப் பயன்படுத்துவதனால் ஏற்படும் சேதங்கள்
- கர்ப்பமாதல் மற்றும் பிள்ளைப் பேறு மற்றும் கருக்கலைப்பு தொடர்பான செலவுகள்
- மோசமான காலநிலையினால் ஏற்படும் பாதிப்புகள்
- உளவியல் அல்லது சிந்தனை ரீதியான பாதிப்புகள்
- பொதுவான பற் சிகிச்சைக்கான செலவுகள்

4.

பயணக் காப்புறுதியைக் கொள்வனவு செய்யும் போது கவனத்திற் கொள்ள வேண்டிய விடயங்கள் எவை?

- **பயணக் காலம் (நாட்களின் எண்ணிக்கக)** - நீங்கள் பயணம் செய்யும் நாட்களின் எண்ணிக்கையே உங்களின் பயணக் காப்புறுதித் தவணைத் தொகையைத் தீர்மானிக்கும் பிரதான காரணியாகும். நீங்கள் சுற்றுலா செல்வது சில தினங்களுக்கு மட்டுமாயின் காப்புறுதித் தவணைத் தொகை குறைவாக இருக்கும் மேலும் நீங்கள் சுற்றுலா செல்லும் தினங்கள் அதிகரிப்பின் காப்புறுதித் தவணைத் தொகை அதிகரிக்கும். காப்புறுதிப்பத்திரம் வழங்கப்படுவது குறிப்பிட்ட காலத்திற்கு மட்டுமேயாகும். அந்தக் காலம் முடிவடைந்தவுடன் அது தானாகவே இரத்தாகும். நீங்கள் 10 நாட்களுக்கு மட்டும் பெற்றுக்கொள்ளும் காப்புறுதியானது, உங்கள் பயணக் காலம் 11 நாட்களாக நீட்டிக்கப்படின், 11ஆம் நாள் காப்புறுதிக்கு உட்படமாட்டாது. அதனால், உங்கள் சுற்றுலா தினத்தின் எண்ணிக்கையை முன்கூட்டியே தீர்மானித்தல் வேண்டும். காலத்தை நீட்டிக்க வேண்டியேற்படின், அது காலாவதியாவதற்கு முன்னரே அதனை நீட்டித்துக்கொள்ளுதல் வேண்டும்.

> "காப்புறுதிப் பத்திரம் வழங்கப்படுவது குறிப்பிட்ட காலத்திற்கு மட்டுமேயாகும். அந்தக் காலம் முடிவடைந்தவுடன் அது தானாகவே இரத்தாகும்."

- **பயணக் காலத்தினுள் திட்டமிட வேண்டிய நடவடிக்கைகள்** - உங்களுக்குப் பொருத்தமான மற்றும் இயலக்கூடிய காப்புறுதியினைத் தேர்ந்தெடுத்தல், உங்கள் பயணத்தின் போது நீங்கள் எதிர்நோக்கக்கூடிய இடர்கள் தொடர்பாக நீங்கள் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும். பயணக் காலத்தின் போது ஏதேனும் இடர் நிறைந்த விளையாட்டுகளில் அல்லது வேறேதும் நடவடிக்கைகளில் ஈடுபடுவீர்களாயின் மேலதிகத் தொகையைச் செலுத்தி மேலதிக காப்புறுதியைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும். அதேபோல், அவ்வாறான இடர்களுக்குக் காப்புறுதியில் ஒரு வரையறையை வைத்துக்கொள்ள முடியும்.

- **மருத்துவ நிபந்தனை உடல்நலம்** - காப்புறுதியைத் தேர்ந்தெடுக்கையில் உடல்நல மற்றும் மருத்துவ நிபந்தனைகள் தொடர்பாக கவனத்தில் கொள்ளுதல் வேண்டும். சிலவேளைகளில் நீங்கள் பயணிக்கும் இடத்தில் நோய் பரவல் இடர் இருக்கக்கூடும். எதிர்பாராமல் நீங்கள் அந்த நோய்த்தாக்கத்திற்கு உட்பட்டால், உங்கள் காப்புறுதியினுள் அதற்குக் காப்பீட்டினைப் பெற்றுக்கொள்ள முடியும் என நீங்கள் நம்பினாலும், சிலவேளைகளில் அதற்கான வரையறைகள் அல்லது காப்பீடு கிடைக்காமல் போகக்கூடும். அதனால் பயணக் காப்புறுதியில் உள்ள மருத்துவ நிபந்தனைகளை மிகக் கவனமாக நீங்கள் கவனத்தில்கொள்ளுதல் வேண்டும்.

- அதேபோல் பணக் காப்புறுதியைப் பெற்றுக்கொள்வதற்கு முன்னர் வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்துதல் வேண்டுமா என்பதனை காப்புறுதி நிறுவனத்திடம்/ காப்புறுதி தரகர் நிறுவனத்திடம் விசாரித்து அறிதல் வேண்டும். அதேபோல், பயணக் காப்புறுதி காப்பீட்டுக்கு உரிய சிகிச்சையை வெளிநாட்டில் பெற்றுக்கொள்வதற்கு முன்னர் உரிய காப்புறுதி நிறுவனத்திற்கு அறிவித்தல் அல்லது அனுமதியைப் பெற்றுக்கொள்ளல் வேண்டுமா என அறிந்திருத்தல் மிக முக்கியமானதாகும்.

- **உங்களுடைய முழுப் பயணமும் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதை உறுதிசெய்து கொள்ளுங்கள்** ஒரு நாட்டிற்கு மட்டும் அல்லாது பல நாடுகளுக்கு பயணம் செய்ய எதிர்பார்த்திருப்பின், அந்த நாடுகள் அனைத்தும் உங்கள் காப்புறுதியில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதை பரீட்சித்திருத்தல் வேண்டும்.

- **உங்களின் அனைத்துப் பொருட்களும் காப்புறுதியில் உள்ளடக்கப்பட்டுள்ளது என்பதை நீங்கள் உறுதி செய்துகொள்ளுங்கள்,** பயணம் செல்வதற்கு நீங்கள் விலையுயர்ந்த கமரா, நகைகள் என்பவற்றைக் கொண்டு செல்வீர்களானால், அது தொடர்பாக காப்புறுதி நிறுவனத்திற்கு அறிவிக்க வேண்டும். அவ்வாறு செய்யாதுவிடின், அப்பெறுமதியான பொருட்கள் காப்புறுதி செய்யாது போகக்கூடும். அவ்வாறான சந்தர்ப்பத்தில் உங்களுக்கு மேலதிக கொடுப்பனவைச் செலுத்தி அப்பொருட்களுக்கான காப்புறுதியைப் பெற்றுக் கொள்ள முடியும்.

5.

பயணக் காப்பறுதியின் போது நீங்கள் செய்ய வேண்டியவை மற்றும் செய்யக்கூடாதவை எவை?

செய்ய வேண்டியவை

- விசா அனுமதிப்பத்திரம் மற்றும் ஏனைய ஆவணங்களுக்காக உங்கள் பயணக் காப்புறுதியை முன்கூட்டியே திட்டமிடுதல் வேண்டும்.
- உடல் நலம் தொடர்பாக மருத்துவ பரிசோதனையை மேற்கொள்ள வேண்டியிருந்தால், அந்த பரிசோதனைக்காக மருத்துவ அறிக்கையைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் முன்மொழிவுப் பத்திரத்தை முழுமையாக மற்றும் உண்மையாக நிரப்புவதில் கவனம் கொள்ளுங்கள்.
- முன்கூட்டியே பயணக் காலத்தைத் தீர்மானித்து அந்த பயணக் காலம் முழுவதற்குமான காப்புறுதியைப் பெற்றுக்கொள்ளுங்கள்.
- உங்கள் பயணக் காலத்தைக் குறைத்துக்கொள்வதற்கு நினைத்தால், அதற்குரிய தொகையை மீளப்பெற்றுக்கொள்ள முடியுமா என அறிந்துகொள்ளுங்கள்.
- பயணக் காப்புறுதிப் பூட்கையில் உள்ள காப்புறுதி செய்யப்படாத நிகழ்வுகள்/ சேதங்கள் தொடர்பாக முழுமையாக விளங்கிக்கொள்ளுங்கள்.

செய்யக் கூடாதவை

- பயணக் காப்புறுதியைப் பெற்றுக்கொள்வதை இறுதி வரை வைத்திருக்காதீர்கள்.
- காப்புறுதி முகவர் பரிந்துரைக்கும் காப்புறுதியை மட்டும் வாங்காதீர்கள், முடிந்தவரை தகவல்களைப் பெற்று உங்களுக்குப் பொருத்தமான ஒன்றைத் தேர்வுசெய்யுங்கள்.
- பணத்தின் அளவை அடிப்படையாகக் கொண்டு காப்புறுதியை வாங்குவதைத் தவிர்க்க வேண்டும், ஏனெனில் இது உங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்யாமல் போகலாம்.

6.

பயணக் காப்புறுதிக்குரிய கோரிக்கை

உங்களது பயணக் காப்புறுதிக்குரிய உரிமையை வெளிநாட்டில் பெற்றுக்கொள்ளுதல் எவ்வாறு என்பது தொடர்பாக அறிந்திருத்தல் மிக முக்கியமானதாகும். அதேபோல், அதற்குப் பின்பற்ற வேண்டிய செயற்பாடுகள் மற்றும் வழங்க வேண்டிய ஆவணங்கள் என்ன என்பது தொடர்பாக வெளிநாட்டுக்குச் செல்வதற்கு முன்னர் அறிந்துகொள்ளுதல் மிக முக்கியமானதாகும். அநேக சந்தர்ப்பங்களில் வெளிநாட்டில் காப்புறுதி நன்மைகளைப் பெற்றுக்கொள்வதற்கு உங்களுடைய காப்புறுதி நிறுவனத்தினால் தேர்ந்தெடுக்கப்பட்ட முகவர் நிலையமொன்று பெயரிடப்படும். இவை அனைத்தும் உங்களுடைய காப்புறுதிப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் மேலதிக விபரங்களை உங்களுடைய காப்புறுதி நிறுவனத்தை அல்லது காப்புறுதி தரகர் நிறுவனத்திடம் கேட்டு அறிந்துகொள்ளுதல் மிக முக்கியமானதாகும்.

இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவிற்கு முறைப்பாட்டினை மேற்கொள்ளும் முறை

7.

காப்புறுதி தொடர்பான முறைப்பாடொன்றைச் சமர்ப்பிக்கும் போது பின்பற்ற வேண்டிய வழிமுறைகள்

இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவிற்கு உள்ள அதிகாரத்தின் பிரகாரம் காப்புறுதிதாரரின் பாதுகாப்பினை உறுதிப்படுத்தும் வகையில் முறைப்பாடுகள் விசாரணை செய்யப்படுவதுடன், அதற்கு பின்பற்ற வேண்டிய வழிமுறைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

முதலில் உங்கள் காப்புறுதி நிறுவனத்திற்கு முறைப்பாட்டினைச் சமர்ப்பியுங்கள். காப்புறுதி நிறுவனத்திற்கு முறைப்பாட்டினை சமர்ப்பிக்கும் வழிமுறையை அறிந்து கொள்வதற்கு https://ircsl.gov.lk/list-of-insurance-companies/ எனும் இணைய முகவரியில் உள் நுழையுங்கள். நிறுவனம் நியாயமான காலப்பகுதியினுள் அதனைத் தீர்த்து, அது தொடர்பான பதிலை வழங்குதல் வேண்டும்.

உங்களுக்கு காப்புறுதி நிறுவனத்தினால் நியாயமான காலப்பகுதியினுள் பதில் கிடைக்காவிடில் அல்லது முறைப்பாடு தீர்க்கப்பட்ட முறை தொடர்பாக நீங்கள் திருப்தியடையாவிடில், உங்கள் முறைப்பாட்டினை இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவிற்கு அல்லது காப்புறுதி ஒம்புட்ஸ்மனுக்கு சமர்ப்பிக்க முடியும்.

இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவிற்கு முறைப்பாட்டினை சமர்ப்பிக்கும் முறைதொடர்பான மேலதிக தகவல்களுக்கு https://ircsl.gov.lk/policyholder-complaints/ எனும் இணைய முகவரியில் நுழையவும்.

இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவினால் பொதுமக்களுக்கு வழிகாட்டுதல்களை வழங்குவதற்காக பயணக் காப்புறுதிப்பூட்கையொன்றைக் கொள்வனவு செய்யும் போது கவனத்தில் கொள்ள வேண்டிய விடயங்கள் தொடர்பாக இந்த கையேடு வழங்கப்பட்டுள்ளதுடன், இதில் பொதுவான தகவல்கள் மட்டுமே உள்ளடங்கியுள்ளன. இதில் குறிப்பிட்டுள்ள விடயங்கள் காப்புறுதி பூட்கையின் நியதிகள் மற்றும் நிபந்தனைகளை பதிலீடுசெய்ய அல்லது இரத்துசெய்யமாட்டது. காப்புறுதிப் பத்திரம் தொடர்பாக சரியான தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கு அல்லது வேறு விபரங்களைப் பெற்றுக்கொள்வதற்கு காப்புறுதி நிறுவனம், காப்புறுதி தரகர் நிறுவனம் அல்லது காப்புறுதி முகவரைத் தொடர்புகொள்ளுங்கள்.

INSURANCE
REGULATORY
COMMISSION
OF SRI LANKA

சந்தைப்படுத்தல் அபிவிருத்தி மற்றும் வெளிவாரி தொடர்புப் பிரிவு
இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு
11 ஆவது மாடி, கிழக்கு கோபுரம்,
உலக வர்த்தக மையம், கொழும்பு 01.
தொலைபேசி - 0112 2396184-9 | பக்ஸ் - 0112 2396190
மின்னஞ்சல் - mder@ircsl.gov.lk

www.ircsl.gov.lk

https://www.facebook.com/Ircslofficialpage/

https://www.linkedin.com/in/insurance-regulatory-commision-of-sri-lanka-980722209/

https://www.youtube.com/channel/UCuM9RLGQTi7B2MM7PL7jfiA

பொறுப்பு மற்றும் துறப்பு
இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவினால் பொதுமக்களின் அறிவினை மேம்படுத்தும் நோக்கத்துடன் இந்த கைநூல் அச்சிடப்பட்டுள்ளதுடன், எந்தவிதமான சட்ட ஆலோசனைகளையும் வழங்குவதற்கு பதிலீடாக இதனைப் பயன்படுத்துதல் கூடாது.